**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 130 /2019**

**Deposition of P.W.** 10

Name : திரு. ரவீந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**10.09.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மதுரை, திருப்பாலையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது 14.01.2018ம் தேதி தக்கலை காவல்நிலைய கூடுதல் பொறுப்பை கவனித்து வந்தேன். அப்போது 15.01.2018ம் தேதி திருவட்டார் காவல்நிலைய ஆய்வாளராகிய நான் ரோந்து பணியில் இருந்த போது கூடுதல் பொறுப்பு வகித்த தக்கலை வட்ட காவல்நிலைய சரகத்தைசார்ந்த கொற்றிக்கோடு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துராஜ் என்பவர் பதிவு செய்த கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண்.12/2018 பிரிவுகள் 294(பி), 341, 307 இ.த.ச மற்றும் 3(1) தமிழ்நாடு பொதுசொத்துக்களை சேதப்படுவதை தடை செய்யும் சட்டபடி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை 15.01.2018ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 15.01.2018 காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்லப்பன், கார்த்திக் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7. புகார்தாரர் சந்திரசேகரன், ரவி ராஜசேகர், தர்மராஜ், மற்றும் வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துராஜ் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விடுமுறையில் சென்ற காவல் ஆய்வாளர் பணிக்கு திரும்பியதால் வழக்கு கோப்பை அவரிடம் ஒப்படைத்து விட்டேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சார்பு ஆய்வாளர் என்னிடம் மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை கொடுக்கவில்லை. 14.01.2018ம் தேதி மாலை 06.45 மணிக்கு சம்பவம் நடந்ததாக சாட்சிகள் புகார்தாரர் சந்திர சேகர், சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சிகள் ரவி ராஜசேகர், ரெஜி, தர்மராஜ் ஆகியவர்கள் என்னிடம் கூறினார்கள் என்றால் சரிதான். எதிரி அ.சா.1 மனைவியிடம் 14.01.2018ம் தேதி மாலை 05.00 மணிக்கு அவரது வீட்டிற்கு சென்று உனது கணவரையும், உன்னையும் வெட்டி கொல்வேன் என்று மிரட்டியதாக கூறினார் என்றால் சரிதான். புகார்தாரரின் மனைவி மற்றும் மகனை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை. மனைவியிடம் மிரட்டி விட்டு வெட்டியதாக எனது விசாரணையில் தெரிய வந்தது. புகார்தாரர் வெட்டுப்பட்ட பிறகு வீட்டிற்கு சென்று மனைவியிடம் பேசியதாக என்னிடம் கூறவில்லை. எதிரி மிரட்டுவதற்கு முன்னர் காயம்பட்டதாக என்னிடம் கூறவில்லை. சம்பவ இடம் கடையால் சப்பாத்து பாலம் என்றால் சரிதான். எதிரியின் இருசக்கர வாகனம் சப்பாத்து பாலத்தின் அருகே கிடந்ததாக சாட்சிகள் கூறவில்லை என்றால் சரிதான். 14.01.2018ம் தேதி சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கீழே விழுந்து பின்னர் எழுந்து இருசக்கர வாகனத்தில் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை சப்பாத்து பாலத்தின் அருகே வீசிவிட்டு சென்றதாக சாட்சிகள் என்னிடம்

கூறவில்லை என்றால் சரிதான். இடதுமுன்கையில் எந்த பாகத்தில் காயம் ஏற்பட்டது என்று கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு வலதுகையை தவிர வேறு இடங்களில் காயம்பட்டதாக என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கூர்மையான பகுதியால் வெட்டியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியை ஊர்காரர்கள் விரட்டியதில் கீழே விழுந்து காயம் ஏற்பட்ட போது சார்பு ஆய்வாளர் எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்ததாக சார்பு ஆய்வாளர் என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவரை ரெஜி என்பவர் ஆட்டோவில் கொண்டு சென்றதாக குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் காய்கறிகளோ, பலசரக்கு சாமான்களோ கிடந்த விபரத்தை நான் பார்க்கவில்லை. எதிரியை 04.30 மணிக்கு சிகிச்சைக்கு அனுப்பினார்கள் என்றால் எனது விசாரணையில் அப்படி தெரிய வரவில்லை. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரியை பொய் புகாரின் அடிப்படையில் காவல்நிலையத்திற்கு அழைத்து வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல.